
தென்னகத்

# தலைவன்



ஆசிரியர் : தினகரன்

மலர் 1 | 13—10—63 | தி. மு. கழக வார ஏடு | விலை 16 காசு | இதழ் 41


# அண்ணா வீட்டுத் திருமணமும் அறிவுகெட்ட 'குமுத'ப் பெண்ணும்!

மலர்ந்து விரிந்தாலும்-பூத்துக் குலுங்கினாலும்-வாசனையே அற்றுப்போன-எதற்கும் பயன்படாத பூக்கள் எத்தனையோ உண்டு!

கருத்து வாசனைதான் இல்லையென்றாலும் - வனப்பு செழிப்பு, பொறுப்பு, மதிப்பு இவைகளில் எதுவுமே இல்லாத கடைகெட்ட காகிதப்பூ 'குமுதம்'

இலட்சக் கணக்கான தமிழ் மக்களின் அபிமானத்தைப் பெற்றிருக்கும் ஒரு கிழமை இதழ், பொதுவாகக் கடைப்பிடிக்க வேண்டியது கற்பு! அதையும் இழந்து-யாருக்கும் நான் கைகொடுப்பேன். இல்லாத செய்திக்கும் இடம் கொடுப்பேன் என்று, தரம் தாழ்ந்த நிலையில் வெளிவந்திருக்கிறது 3. 10. 63 தேதியிட்ட 'குமுதம் ஏடு'

சிறப்புக்குரிய நாட்களில் செயற்கை மணத்தோடு சிங்காரித்துக் கொண்டு ஊர்வலம் புறப்படும் 'குமுதம்' 3. 10. 63 இதழில், தொடக்கூடாத ஒன்றைத் தொட்டு முகத்திலே அப்பிக் கொண்டு - கூவத்தின் நாற்றத்தைக் கூந்தலிலே சுமந்தபடி வெளிவந்திருக்கிருள் குமுதப் பெண்.

அறிஞர் அண்ணா வீட்டுத் திருமணம் சுபயோக சிபதினம் என்று ஜோதிடர்களால் கணித்து சொல்லப்பட்ட நல்ல நாளில்தான் நடந்ததாம்.

அறிஞர் அண்ணா அவர்கள் பஞ்சாங்கத்தைப் புரட்டிப் பார்த்து அந்த நல்ல நாளையே தேர்ந்தெடுத்துக் கொண்டார்களாம்.

திருமணம் நடைபெற்ற செப்டம்பர் முதல் நாளன்று-அமிர்தயோகம் பத்தரை மணியிலிருந்து பன்னிரண்டுமணி வரைதாலும்! எமகண்டம் பன்னிரண்டிலிருந்து ஒன்றரை மணி வரையாம்! இப்படிப் புரோகிதர்கள் சொல்லியுள்ளார்களாம்.

பரிமளம்-சரோஜா, இளங்கோவன்-விசயலட்சுமி ஆகிய செல்வங்களின் திருமணம் புரோகிதர் சொல்லியுள்ள அமிர்தயோகத்தில்தான் நடைபெற்றதாம்.

அதற்குபின்—

"அண்ணாதுரை- மணமக்களை 12 மணிக்கு வரப்போகும் எமகண்டத்திற்குப் பயந்து-அரை மணி நேரத்துக்கு முன்னதாகவே அங்கிருந்து அனுப்பி விட்டார் — எமகண்டத்தைக் கண்டுமிரண்டு, அமிர்தயோகத்திலேயே வீட்டுக்குப் 'பேக்' செய்து விட்டார்!''

"அதன் பின்னர், மணமக்கள் இல்லாத இடத்தில் முன்னணி வீரர்கள் அனைவரும் மணமக்களுக்கு அறிவுரை வழங்கிய 'அதிசயக்காட்சி' யும் நடைபெற்றது!

இப்படி ஒரு செய்தி- வேளை காலம்,பார்த்துத்தான் நடக்தது-அண்ணா வீட்டுக் கல்யாணம்'' என்ற தலைப்பில் 3. 10,68 குமுதம் ஏட்டில் வெளியாகியுள்ளது.

இப்படி ஒரு புரட்டுச் செய்தி, புரளிச் செய்தி, உண்மை கடுகளவும் இல்லாத ஒரு ஊதாரித்தனமான செய்தி குமுதம்பத்திரிகையில் 'இடம் பெற்று' வெளி வந்திருக்கிறதே தவிர-அது குமுதத்தின் சொந்தக் கருத்து அல்ல

"குமுதம்'' பத்திரிகையின் ஆசிரியரான அண்ணாமலை, எம். ஏ. பி. எல். லோ-அல்லது அதன் ஆசிரியர் குழுவோ காஞ்சிபுரம் சென்று திருமண நிகழ்ச்சியை நேரில் பார்த்து விட்டு வந்து எழுதிய செய்தி அல்ல அது.

ஒரு மொட்டைக் கடுதாசிக்கு மேள தாளத்தோடு வரவேற்புக் கொடுத்து வெளியிட்டிருக்கிறது. குமுதம் பத்திரிகை!

மஞ்சள் பத்திரிகைக்குச் சமமாக உள்ள ஒரு நாலாந்தர ஏட்டில்- அண்ணா வீட்டுத் திருமண நிகழ்ச்சி திரித்து வெளியாகியிருந்த போதே, அந்தச் செய்தி நம் கண்ணில் படாமலில்லை. அந்த அசிங்கங்களுக்குப் பதில் சொல்லுவது-மறுப்பு எழுதுவது சாக்கடையிலே கல்லெறிவது போன்ற வேலையாகும் என்ற எண்ணத்தில்தான் அந்தக் கந்தல் பத்திரிகையை கழிவுநீரில் தூக்கியெறிந்தோம்.

அந்தப் பத்திரிகையில் வெளியான கந்தல் செய்தியை தூக்கித் தலையிலே கட்டிக் கொண்டு வெளி வந்திருக்கிருளே குமுதப் பெண்! அந்தத் தரங்கெட்ட நிலையை எண்ணிதான் மெத்தப் பரிதாபப் படுகிறோம்.

'குமுதம்' குனேகாவில் மட்டும் குளித்து வருவதில்லை—கூவநாற்றத்திலும் மிதந்து வரும்! இது குமுதத்தின் பண்பாட்டுவழிபோலும்.

(10-ம் பக்கம் பார்க்க)

## கூறுகெட்ட குமுதம் கூறட்டும் பதில்!

# கூழுக்கு அழுவோர் கூவத்தின் ஓரத்தில்! கொழுத்துத் திளைத்திருப்போர் காங்கிரஸ் கூடாரத்தில்! ஏழைக்கு வாழ்வில்லை! எளியோர்க்கு இடமில்லை!



# முதலைக்கு வாழ்வு தரும் முடிவேந்தர் ஆட்சி!

# இல்லாதாரை ஒழிக்க இயலாத அரசு இல்லாது ஒழியட்டுமே!

நாட்டு வருமானம் மக்களில் பலதரப்பட்டவர்களுக்கும் பகிர்ந்து செல்லும் முறைபற்றி பாராளுமன்றத்தில் பேசிய பலரும் இருதரப்பிலும்ஏராளமான புள்ளி விவரங்களைத் தந்தார்கள்! புள்ளி விவரங்கள் பொய் கூருது. ஆனல் புள்ளி விவரங்களை வைத்து ஒருவர் பொய் கூறலாம் என ஒரு வாக்கு உண்டு. இருதரப்பிலும் கூறப்பட்ட புள்ளிவிவரங்களைப்பற்றி நான் ஒன்றும்கூறவில்லை. தனிப்பட்ட நபரின் நாள் வருமானம் மூன்று அணவா, ஆறு அணவா என்பதல்ல முக்கியமான பிரச்சினை. இன்றுள்ள பிரச்சினை அதைவிட முக்கியமானது-கடினமானது.

நாள் வருமானம் பற்றி பிரதம மந்திரி கொடுத்த புள்ளிவிவரமும், ஒன்றுக்கொன்று மாறுபட்டு இருக்கின்றன. அரசாங்க சார்பில் தரப்பட்ட புள்ளி விவரங்கள் குழப்பம் நிறைந்தனவாக இருக்கின்றன. ஏழ்மையைப் பற்றிய புள்ளி விவரங்களைப் பார்க்கிற பொழுது. புள்ளி விவரங்களைப் பற்றி அரசாங்கத்திடம்எவ்வளவுஏழ்மையைப்பற்றிய புள்ளிவிவரம்-புள்ளிவிவரம் பற்றிய ஏழ்மை, இந்த இரண்டும் இன்று விவாதிக்கப்படவேண்டிய முக்கிய பிரச்சினைகளாக ஆகிவிட்டன.

விடுதலை கிடைத்து 15 ஆண்டுகளாகியும், திட்டங்கள்போட ஆரம்பித்து 10 ஆண்டுகள் கழிந்தும், நாட்டு மக்கள் அரசாகத்திற்கு சரிவரத் தெரியவில்லை. இன்னும் இருட்டில் தடுமாறுவதைப்போலஅரசாங்கம் தடுமாறுகிறது. மக்களின் வேதனை – துன்பம் – ஏழ்மை இவற்றைப்பற்றி அரசாங்கம் சரிவர உணரவில்லை.

சராசரி வருமானம் பற்றியும், மற்ற "சராசரி" புள்ளி விவரங்கள் பற்றியும் பலரும் பேசினார்கள்.

சராசரி புள்ளிவிவரம் ஓரளவுக்குத்தான்-குறிப்பிட்ட ஓரளவுக்குத்தான்-அது பயன்படும். ஒருவரின்ஒருகாலைப்பனிக்கட்டியிலும், மற்ருெரு காலை கொதிக்கும் தண்ணீர்த் தொட்டியிலும் வைத்திருக்கச்செய்து, இரண்டு வெட்ப நிலைகளையும் குறித்து சராசரியைப் பார்த்தால், சராசரி சீதோஷ்ண நிலை மிக உல்லாச நிலையைத்தான் காட்டும். சராசரி புள்ளி விவரம் அந்த மனிதன் அனுபவிக்கும் வேதனையை உணர்த்தாது. அதே போன்ற நிலைமைதான் நாட்டிலும் நிலவுகிறது. நாட்டு வருமானமும் சராசரி தனிநபர் வருமானமும்ஆண்டுதோறும் உயர்ந்து கொண்டே போவதாகக் கூறுகிருர்கள். அதே சமயம்,ஏற்றத்தாழ்வும்-பணம் படைத்தவர்களுக்கும் ஏழ்மை யடைந்தவர்களுக்கும் இடையே உள்ள ஏற்றத்தாழ்வும் வளர்ந்து கொண்டே போகிறது. அதை நாம் நன்கு கவனிக்கவேண்டும். சராசரி வருமானம்,நாட்டு நிலைமையை முழுவதும் எடுத்துக் காட்டாது, 1,99 ஆகிய இரண்டு எண்களுடையசராசரி 50;அதே போல் 49.51 ஆகிய இரண்டு எண்களின் சராசரியும் 50தான்! சராசரியை வைத்துக்கொண்டு இரண்டும் ஒரேமாதிரி என்று கூறிவிடமுடியாது. 1,99 இல் ஏற்றத்தாழ்வு அதிகமாக இருக்கிறது. 49.51இல் ஏற்றத்தாழ்வு மிகக் குறைவாக இருக்கிறது!

நாட்டு வருமானம்பற்றிப் பேசுகின்ற நேரத்தில், ஏற்றத்தாழ்வுகளைப்பற்றி நன்கு கவனிக்க வேண்டும். உல்லாசமாளிகையின் உப்பரிகையில் உலவுபவர்கள் ஒருபுறம், சேற்றிலும் சகதியிலும் அமிழ்ந்து அவதிப்படுபவர்கள் மற்ருெரு புறமும் இருக்கும் நிலை வரவர வளர்ந்தபடி இருக்கிறது. ஐந்தாண்டுத் திட்டங்களினல் பணக்காரர்கள் மேலும் பணக்காரர்கள் ஆனர்கள். எழைகள், மேலும் ஏழ்மை யடைந்தார்கள் என்ற நிலையை பிரதம மந்திரி உட்பட பலரும் ஒப்புக்கொண்டுள்ளார்கள். முதல் ஐந்தாண்டுத் திட்டத்திலும், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டங்களினுல் உண்டான பலன்கள் சரியானபடி எல்லோருக்கும் பகிர்ந்து செல்லவில்லை.

ஐந்தாண்டுத் திட்டங்களினல் உண்டானசெல்வச்செழிப்பும்வருமானமும்எங்குபோயின என்பதை ஆராய, திட்ட அமைப்பு ஒரு நிபுணர்குழுவை நியமித்தது 1960 அக்டோபரில்

(8-ம் பக்கம் பார்க்க)




## காமராசரின் கைப்பாவை பக்தவத்சலம்!

### அடக்கு முறைகளை வீசுவார்! அலட்சியமாய் இருக்காதீர்!

"பக்தவத்சலம் முதலமைச்சர் ஆனதும், அவரது கையைப் பிடித்து அழைத்துப்போய் காமராசர், தான் அமர்ந்திருந்த இருக்கையில் உட்கார வைத்துவிட்டு வந்தார் என்ருல் இதற்கு என்ன பொருள்? 'நான் முதலமைச்சராக இருந்தபோது உட்கார்ந்த இடம் இது. இப்போது உம்மை முதலமைச்சராக்கி இதே இருக்கையில் உட்கார வைத்திருக்கிறேன். நீர் இந்தப் பதவியில் ஒழுங்காக இருந்தால் இந்த இடம் நீடிக்கும். இல்லையேல் இந்த இடம் உம்மிடம் இருக்காது'-என்பதல்லவா பொருள்?"

"இதை எப்படித்தான் பக்தவத்சலம் ஏற்ருரோ ஆனல் எனக்கு அது 'அசிங்கமாக' இருக்கிறது! பதவி ஒருவரின் தகுதி, திறமைக்கேற்ப கிடைக்கவேண்டும். ஆனல் பக்தவத்சலத்திற்குக் கிடைத்த இப்படிப்பட்ட பதவி-பதவிதானு?"

"இது எப்படியிருக்கிறதென்ருல்-நவராத்திரி கொலு வைக்கப்படும் காலத்தில் குழந்தைகளுக்கு கிருஷ்ணன் வேடமிட்டு, அவர்களை ஒவ்வொரு வீட்டுக்கும் அழைத்துச் சென்று காட்டுவதைப்போல, பக்தவத்சலத்திற்கு முதலமைச்சர் வேடமிட்டு, கையைப்பிடித்து இழுத்துப் போய் மக்களிடத்தில்-'அவர் ஒழுங்காக இருப்பார்; மற்றவைகளை நான் பார்த்துக் கொள்கிறேன்'-என்று கூறி வருவதற்குச் சமமாகும்!"

"பக்தவத்சலம் முதலமைச்சராகியிருப்பது சுதந்தரமான ஒரு ராஜ்யத்துக்கல்ல; இந்தியாவின் ஒரு பகுதிக்குத்தான். அவர் தானுகவும் ஆகவில்லை, காமராசரால் வழங்கப்பட்ட பதவியை ஏற்றிருக்கிருர். ஆகவே அவர் காமராசர் சொல்வதையும் கேட்கக் கடமைப்பட்டிருக்கிருர்; டெல்லியிடும் கட்டளையையும் நிறைவேற்றக் கடமைப்பட்டிருக்கிருர். கழகம் நடத்தும் போராட்டத்தை நசுக்கவேண்டும் என்று டெல்லி உத்திரவிட்டால் இவர் அடக்கு முறைகளை வீசக் காத்திருக்கிருர். அதிலே பக்தவத்சலம் சிறிதும் தயங்கமாட்டார்."

"தி. மு. கழகத்தை எதிர்ப்பதில், காமராசரைவிட ஒரு படி அதிகமாக இருப்பவரே தவிர, குறைந்தவரல்ல பக்தவத்சலம்! அவர் சும்மாயிருந்து விடுவார் என்று நம்பி நாம் ஏமாந்துவிடக்கூடாது."




| மலர் 1 | 13–10–63 | இதழ் 41 |
| --- | --- | --- |

# இந்தி ஒழியவேண்டும்! இல்லையேல் எங்கள் உயிர் அழியவேண்டும்!

தென்னவரின் மொழிகளுக்கு, பண்பாடுகளுக்கு, நாகரிகத்திற்கு மூத்த பழம் தேசிய உணர்ச்சிகளுக்கு இன்றைய ஊற்றுக்கால் சென்னை!

இயந்திர கதியில் செல்லும் மனிதக் கட்டைகளினூடே "வெந்ததைத் தின்போம்; விதி முடிந்தால் சாவோம்" என்று திரியும் ஜடங்களினூடே புகுந்து, இடியெனத் தாக்கி-மழையெனப் பொழிந்து-மின்னலெனச் சாடி "நீயுமோர் மனிதன்!" என்று, சேதி சொன்ன-விழிப்பூட்டிய தி. மு. கழகம், அக்டோபர் பதின்மூன்றும் நாள் இந்தி எதிர்ப்புப் பொது மாநாட்டை அந்தச் சென்னையில்தான் கூட்டுகிறது.

"வாழ்ந்தால் மானத்தோடு வாழ்வோம்; இன்றேல் கூண்டோடு சாவோம்!" இலட்சிய முழக்கம் இதுவேயாக பேரறிஞர் பெருந்தகை அண்ணாவின் தலைமையிலே கூடுகிறோம்.

காட்டாற்று வெள்ளமெனப் புதுச் சேதி பல சொல்லும் பேராசிரியர் க. அன்பழகன் மாநாட்டைத் திறந்து வைக்கிறார்.

சிந்தனைச் சிற்பி சி. பி. சிற்றரசு கொடியேற்றுகிறார்.

மாநாட்டு அரங்கோ, புகழ்மணக்கப் பொதுப் பணியாற்றிய தோழன் கோ. சு. மணியின் பெயரில் அமைந்திருக்கிறது.

அகில திராவிடத்திலுமிருந்து ஆயிரக்கணக்கான மறவர்கள் ஆர்ப்பாட்டப் போர்ப் பாட்டிசைத்து வருவதை மனக்கண்ணால் காண்கிறேன்!

அலைகடலென-எரிமலையென உணர்ச்சி பொங்க அவர்கள் புறப்பட்டு வருவதைக் காண்கிறேன்!

ஆனால் மீஞ்சூர் மிராசுதார்-பத்து லட்சம் பாரத புதல்வர்-சென்னைவாழ் குட்டி இட்லர் மட்டும், கொக்கரிக்கிறார்; கோர சொரூபம் காட்டுகிறார்; "கொடுங்கோலன் ஜாரும் லூயியும் எனக்கு மூதாதையர்கள்" என்கிறார்.

தி. மு. கழக போராட்டம் நடத்தினால் கடும் நடவடிக்கை எடுப்பேன்" என்றாராம்.

பின் என்ன? நீர் பூமாலை போடுவீர்; புகழ்மாலை சூட்டுவீர் என்றெண்ணியா கழகம் போராட்டத்தைத் தொடங்குகிறது?

நெருப்பைத் தொட்டால் சுடும்; தேளைத் தூக்கினால் கொட்டும்; சுழலில் விழுந்தால் மூச்சுப் போகும்; அரசியல் போராட்டத்தில் ஈடுபட்டால், உயிர்போகும்! இந்தப் பாலபாடம்கூட அறியாமல் ஏனோதானோவென்று அரசியலில் புகுந்தவர்களில்லை நாங்கள்!

பக்தவத்சலனாரே! கறைபடிந்த அரசியலுக்கு மொத்தச் சொந்தக்காரரே! வாரும்! வாரும் உம் வாளை எடுத்துக்கொண்டு!

அணுகுண்டுகளையே ஒரு கை பார்த்த எம்மிடமா, நீர் சீனிப் பட்டாசைக் காட்டுகிறீர்!

அலைகடலையே ஒரு கை பார்த்த எங்களிடமா நீர் கை வரிசை காட்டுகிறீ?

சிறைகளைக் காலி செய்யும்! தடிகளுக்குப் பூண்பிடியும்! துப்பாக்கிகளில் தோட்டாவைத் திணியும்! குதிரையின் கால்களுக்குப் புதிய லாடம் அடியும்!—என்று ஹிட்லர் சொன்னதைச் சிரம்மேல் தாங்கிச் செயல்படுகிறீர்! அத்தனையும் செய்வதோடு, உமது ஆணவ அரசுக்கு ஒரு கல்லறையும் கட்டிக் கொள்ளும்!

பக்தவத்சலனாரே! உருட்டல் மிரட்டல்களுக்கு அஞ்சுவதென்றால், உலகம் வீரகாவியங்களைப் பார்த்திருக்கவே முடியாதே!

லெனின் உயிரை வெல்லமாக மதித்திருந்தால், ஆணவ மணிமுடி சுக்குநூறாகியிருக்குமா?

பகவத்சிங்கும், ராஜகுருவும், சுகதேவும் உயிரை ஒரு பொருட்டாய் கருதியிருந்தால், வெள்ளையர் மூஞ்சியில் கரிப்பட்டைவிழுந்திருக்குமா?

அந்தமான் தீவிலும் மாண்டலே சிறையிலும் வாடியதலைவர்கள், மனைவாழ்வை ஒரு பெருஞ்சுகமாய் எண்ணியிருந்தால், இந்நேரம் நீர் பதவியிலிருக்க முடியுமா?

பதவிக்காகக்கைகட்டி நிற்பவரே! ஓர் உறுப்பினர்தான் நம்பிக்கையில்லை என்றார், என்றாலும் இராமநாதபுரம் ஜில்லாபோர்டு தலைவர் பதவியைத் தூக்கி எறிந்துவிட்டு வெளியேறினார், எங்கள் ஊ. பு. க. சௌந்தரபாண்டியனார்!

இருபத்தி நான்குபேர் அதுவும் சொந்தக் கட்சிக்காரர்கள் எதிர்த்து வாக்களித்த பின்னும், அட்டையெனப் பதவியில் ஒட்டிக்கொண்டிருக்கும் இழிதகையோரில்லை நாங்கள். பதவிக்காக நாங்கள் போராடுகிறோம் என்று சொல்வது தவறு.

எல்லா இழிகுணங்களும் ஒருரு வாய்ப்புறப்பட்டது காங்கிரஸ், அதில் மணிமுடியாய்-நடுநாயகமாய் வீற்றிருக்கும் நீர் கேலி செய்கிறீர்!

உலக்கைக் கொழுந்து புத்திக்கு மொத்தச் சொந்தக்காரரே! உம்மைக் கேட்கிறோம் ஒரு கேள்வி!

"ரஷ்யாவில்கூட இந்தியையும்-சமஸ்கிருதத்தையும் படிக்கிறார்கள்; இங்கே படித்தால் என்ன குறைவு! அந்நியனுக்கே விளங்குவது நமக்கு விளங்காமல் போய்விடுமா?"—சென்னைப் பள்ளி விழாவொன்றில் இப்படிக் கேட்டிருக்கிறீர்.

அநியாயப் புத்திசாலியையா நீர்! ரஷ்யாவில் ஐந்தாம் வகுப்பும் எட்டாம் வகுப்பும் படிப்பவனா இந்தியும் சமஸ்கிருதமும் கற்கிறான்? இல்லையே!

கல்லூரி நிலையை அடைந்த பிறகு சிலர் மொழிப் படிப்பில் ஈடுபடுகின்றனர்; எல்லோரும் ஈடுபடுவதாக நினையாதீர்!

அதிலும் மத்திய அரசின் பதவி வேண்டுமென்பதற்காகப் படிக்கவில்லை! பல மொழிகளை அறியவேண்டுமென்பதற்காகப் படிக்கின்றனர்!

முழுப் பூசனிக்காயைச் சோற்றில் மறைக்கஎண்ணும்முதன் மந்திரியாரே! நீரோ இங்கு ஆறும் வகுப்பு முதல்-எட்டாம் வகுப்பு முதல் என்று, வௌவால் மொழியைப் படிக்கச் சொல்லி உயிரெடுக்கிறீர்! அதுவும் "வயிறு கழுவவேண்டுமானால் வயிற்று நரம்பைச் சுண்டியிழுக்கும் இந்தியைப் படி" என்கிறீர்!

அடிமைத்தளை உமக்குத் தெரியவில்லை? அதுதான் நிலை என்று எம்மால் நம்பமுடியவில்லை!

இன்றைய பதவிச் சுகத்தை மட்டும் எண்ணி வாலாட்டு வீரேயானால், அது அவமானத்தில் முடியும்.

இதே சென்னையில்தான் அட்டகாசங்களின் மொத்தஉருவமாய்த் திரிந்தான் நீலன் என்னும் பரங்கி வெறியன். கடைசியில் அவன் சிலையும் அவமானத்திற்குள்ளானது; அந்தச் சிலை பட்டபாட்டை-காங்கிரஸ் வரலாற்றை அறிந்தவர்களிடம் கேட்டுப் பாருங்கள்!

மொழிப் போராட்டம் எங்கள் கடமை. அதை நையாண்டி செய்துபார்த்தீர்! வக்கனை செய்து பார்த்தீர்! இப்போது செவ்விழியும் காட்டுகிறீர்!

அக்டோபர் பதின்மூன்றில் அண்ணா அறிவிக்கிறார் பேராட்ட நாளை! நாங்கள் அன்று களத்திற்கு வருவோம்! ஜனநாயகத்தைக் கொன்று தின்று கொழுத்தவரே! வாரும் அந்த நாளில் துணிவிருந்தால்! அடக்கு முறைக்குப் பெயர்போனஉம் போலீஸ் அதிகாரிகளையும் அழைத்துக்கொண்டு!

இதோ உரைத்துவிட்டோம், சூளுரை!

தாளமுத்து-நடராசா! உங்கள் மேல் ஆணை! அடக்கு முறைக் கொடுமைகள் ஆயிரமாயிரம் நெஞ்சைக் கிழிக்கலாம்; எலும்பைப் பொடிப் பொடியாக்கலாம்; ஆனாலும் அஞ்சோம்;

இதோ புறப்பட்டுவிட்டோம்!

ஒன்று இந்தி ஒழியவேண்டும்; இன்றேல் எங்கள் உயிர் அழியவேண்டும்!

# புத்துயிர்

டால்ஸ்டாயின் படைப்புக்களை நீங்கள் படித்திருப்பீர்கள். அவன் சாதாரண எழுத்தாளன் அல்லன். எழுத்துவேந்தன்! தன் வலிமை நிறைந்த எழுத்தால் ஜார் மன்னனையே ஆட்டிப் படைத்தான். ஒரு இனத்திற்கு - இலட்சியத்திற்கு விடுதலை வாங்கிக் கொடுத்தான்! அவன் கடைசியாக எழுதிய அருமையான நாவல் 'புத்துயிர்' அதைப்பற்றிய சுவையான கட்டுரை இது.

**இரா. இளஞ்சேரன் எழுதுகிருர்.**

சென்ற நூற்ருண்டில் பாரீஸில் வைத்து பிரசித்தமான ஒரு இலக்கிய சந்திப்பு நடந்தது. துர்கனீவும் டால்ஸ்டாயும் ரஷ்ய நாட்டைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் பாரீஸிலே வாழ்ந்த துர்கனீவ் அங்கு வந்த டால்ஸ்டாயை ஆரவாரத்தோடு வரவேற்ருன். எனினும் அந்தச் சந்திப்பு உற்சாகத்தைக் கொடுக்கவில்லை, இருவருக்கும்,

துர்கனீவ் முழுக்க முழுக்க மனிதாபிமானி; டால்ஸ்டாயோ விவலிய நூலிலே வாழ்வு கண்டவன்! இருவரும் இரு துருவங்களாக விலகி நின்ருலும் டால்ஸ்டாயின் தனிச் சிறப்பை துர்கனீவ் அபாரமாகப் புகழ்ந்தான்.

"இந்த மனிதன் சாவதற்கு முன்ஞலே, உலகத்தின் பெரும் பகுதியை தன் பக்கம் திருப்பி விடுவான்!" துர்கனீவின் இந்த வாக்கு பிறகு பொன்ஞயிற்று.

டால்ஸ்டாயின் இறுதி நாட்களில் புகழொளி அவனை சூழ நின்றது. உலகெங்கும் அவனது எழுத்தாற்றலும், மேதாவிலாசமும் இலட்சியங்களும் போற்றப்பட்டன. "எத்தனை ஆற்றல்! எத்தனை அற்புதம்! வானத்தை எட்டுமளவிற்கு வளர்ந்திருக்கும் மகத்தான கலைஞன்!" என்று புரட்சித் தலைவன் லெனினே டால்ஸ்டாயை வாயாரப் புகழ்ந்திருக்கிருன்!

"போரும் சமாதானமும்" "அன்ஞகரினீஞ" போன்ற அற்புதமான நாவல்களை எழுதிய டால்ஸ்டாய்மஞேதத்துவசிறப்பாலும், சிற்ப எழில் கொழிக்கும் சொல்லாட்சியாலும் ரஷ்ய இலக்கியத்தையே உருபடி உயர்த்திய டால்ஸ்டாய்வேதப் புத்தகத்தின் சொற்களுக்கு புதிய பொருள் தேடிக்கொண்டிருப்பதிலேயே தன்னை மறந்து வாழ்ந்தான்!

டால்ஸ்டாயிடமிருந்து 'அன்ஞகரினீஞ' போல ஒரு பெரும் சிருஷ்டியை இனி எதிர்பார்க்கவே முடியாது என்று உலகம் முடிவுகட்டியிருந்த வேளையிலே டால்ஸ்டாய் 'புத்துயிர்' என்ற பெருங்கதையை எழுதத் துவங்கிஞன்;

பொருளுக்காக எழுதுவதில்லை என்று சபதமேற்கொண்ட டால்ஸ்டாய் பத்திரிகையாளர்களிடம் கதையின் பிரசுரத்திற்காக பேரம் பேசிஞன். ஜாரின் அடக்குமுறைக்கு ஆளான டுகாம்பேர்ஸ் இன மக்களை விடுதலை செய்ய டால்ஸ்டாய் வெகுவாகப் போராடிஞன். இந்தப்போராட்டம் டால்ஸ்டாயின் வாழ்க்கையிலேயே மறக்க முடியாத நிகழ்ச்சி! பிரான்ஸ் நாட்டில் டிரைபஸிற்காக எமிலிசோலா எப்படி வாதாடிஞனே, அதற்கும் சற்றும் குறையாத வேகத்தில் டால்ஸ்டாய் தன் முழு வலிமையையும் இதற்காக சிலவிட்டான்.

தெளிவாக, விரிவாக சொல்ல வேண்டிய நிகழ்ச்சி அது.

*1895*-ல் புதிய ஜார் பட்டத்திற்குவந்ததும் ஒரு பிரகடனம் வெளியிட்டான். இந்தஅறிக்கையில் மக்களாட்சி முறை நடக்கவே முடியாத கற்பனை என்று கேலி செய்யப்பட்டிருந்தது. பழைய ஜாரின் பாணியும் அதிலேஅப்படியே நிழலிட்டது, ஏகாதிபத்திய வெறியும், திமிரும் பிரகடனத்தில் பளிச்சிட்டாலும், அரச பரம்பரைக்கே உரித்தான தந்திர புத்தியோடு நாட்டில் வாழ்ந்து வந்த பல்வேறு மதப்பிரிவினையுள்ள மக்கள் கூறுகளை ஒன்றுபடுத்தி தன் ஏகாதிபத்திய நிழலை விரிக்க ஜார் நினைத்திருந்தான்.

அன்று ரஷ்யாவில் டுகாம்பேர்ஸ் என்று குறிப்பிடப்படும் இனமக்கள் தங்களது தனித்த மதக் கோட்பாடுகளோடு வாழ்ந்து வந்தார்கள். கிருத்துவின் போதனைகளை அப்படியே கடைப்பிடித்து வந்த அவர்களிடையே தனிச் சொத்துரிமையோ கிளைப்பிரிவுகளோ, ஏற்றத் தாழ்வோ கிடையாது. உலகத்தில் அவர்கள் எந்த சக்திக்கும் அஞ்சுவதில்லை. ராஜ பக்தியும், புரோகித பக்தியும், தனிச் சொத்துரிமையும் இல்லாத இந்த மிலேச்சர் கூட்டம் நாட்டிலே வாழ்வதும், அவர்களை வளரவிடுவதும் எத்தனை ஆபத்தானது என்பதை உணர்ந்த ஜார் டுகாம்பேர்ஸ் சமுதாயத்தினர் அனைவரையும் காக்கஸஸிற்கு நாடு கடத்திஞன்.

நாடு கடத்திய பின்னரும் அவர்களிடையே டால்ஸ்டாயின் தத்துவங்கள் புதிய விழிப்புணர்ச்சியை விளைத்தன. போருக்கு ஆள் சேர்க்க அரசு முயற்சி எடுத்தபோது டால்ஸ்டாயும், அவரது ஆதரவாளர்களும் எப்படி அதனை எதிர்த்தார்களோ அதேபோல, டுகாம்பேர்ஸ் இனத்தவரும் படையில் சேருவதை விரும்பவில்லை. அதோடு அவர்கள் நின்றுவிடவில்லை. பெரிய தீக்குண்டம் வளர்த்து அதில் போர்க் கருவிகளை எல்லாம் போட்டு பொசுக்கிஞர்கள். சேதி தெரிந்த ஜார் குதிரைப் படை வீரர்களை அனுப்பிஞன். அடக்கு முறை தலைவிரித்தாடிற்று. அதிகாரம் ஆடாத ஆட்டமெல்லாம்ஆடித் தீர்த்தது. கடைசியாக கணக்குப் பார்த்த போது நாலாயிரம் மக்கள் அந்த கோரநிகழ்ச்சிக்கு பலியாகி யிருந்தார்கள்!

நிகழ்ச்சியின் பயங்கரத்தை மூடிவைக்க அரசுமேற்கொண்ட முயற்சிகள் பலிக்கவில்லை. டால்ஸ்டாய்க்கு சேதி தெரிந்ததும் அங்கே சென்று விவரங்களை சேகரித்து வர சிலரை அனுப்பிஞன். போனவர்கள் வந்து சொன்ன விவரங்களைவைத்துக் கொண்டு லண்டன் 'டைம்ஸ்' பத்திரிகையில் டால்ஸ்டாய் ஒரு அறிக்கையை வெளியிட்டான். உலகின் மூலை முடுக்குகளிலெல்லாம் செய்தி எட்டியது. ரஷ்ய அரசோ திருடனுக்கு தேள் கொட்டிய நிலையில் தத்தளித்ததே தவிர தோல்வியை ஒப்புக்கொள்ளவில்லை. டால்ஸ்டாய் தனக்கே உரிய புன்சிரிப்போடு அந்த அறைகூவலை ஏற்றுக் கொண்டான்.

நாடுகடத்தியவர்களை திரும்ப அழைக்கவேண்டும். அல்லது வேறுவெளிநாடுகளில் குடியேற அவர்களுக்கு அனுமதி யளிக்க வேண்டும். கவர்னர்களுக்கும், அமைச்சர்களுக்கும், அதிகாரிகளுக்கும் டால்ஸ்டாய் இப்படி ஒரு வேண்டுகோள்விடுத்தான். பல பத்திரிகைகள் உதவி நிதி திரட்டின, டால்ஸ்டாயின் பக்கம் மக்கள்திரண்டார்கள். ஜார் எதனையும் பொருட்படுத்தவில்லை வேண்டுகோள்கள் புறக்கணிக்கப்பட்டன. பத்திரிகைகள் தடை செய்யப்பட்டன; ஆதரவாளர்கள் அடித்து நொறுக்கப்பட்டார்கள்; சிறைக்கூடங்கள் நிரம்பி வழிந்தன! டால்ஸ்டாயை மட்டும் அரசு தொடவேயில்லை! அந்த அளவில் ஜார் புத்திசாலியாக நடந்து கொண்டான்!

அவனது குரல் உலகின் மனச் சாட்சியைப் பிடித்து உலுக்கிற்று எண்ணற்ற ஐரோப்பிய பத்திரிகைகள் ரஷ்ய ஆட்சியாளரின் காட்டுமிராண்டி தர்பாரைக் கண்டித்து தலையங்கங்கள் தீட்டின. ரஷ்யாவின் சர்வதேச மதிப்பே குலைந்து போகும் அளவுக்குநிலை விபரீதமாகிவிட்டது!

வேறு வழியற்ற அரசு பணிந்தது.

மூன்று வருடங்களாக நடைபெற்ற இந்த 'தர்ம யுத்தம்' டால்ஸ்டாயின் வெற்றியோடு முற்றுப் பெற்றது.

டால்ஸ்டாயின் விருப்படி டுகாம்பேர்ஸ் இனமக்களைவேறு நாடுகளுக்குச் செல்ல ஜார் அரசு அனுமதியளித்தது. கனடா அவர்களை குடியேற்ற முன் வந்தது. ஏழாயிரத்திற்கு மேற்பட்ட மக்களை கப்பலேற்றி அனுப்பி வைக்கும் புனித

(9-ம் பக்கம் பார்க்க)

## இந்தியா முழுவதையும் கட்டி ஆள ஆசைப்படும் இந்தி வெறியர்கள் !



"அரசியல் ரீதியாகப் பார்க்கும்போது, ஒருகாலத்தில் இந்தியா முழுவதையும் தாங்களே கட்டியாளலாம் என்ற ஆசை கொண்ட ஹிந்திப்பித்தர்கள் இருக்கிருர்கள்; அந்தத் திசையிலே இன்றைய முயற்சியெல்லாம் நடக்கிறது என்ற பயம் பிறமொழிப் பிராந்திய மக்கள் பலருக்கு-முக்கியமாகத் தமிழ்நாட்டினருக்கு இருக்கிறது. இந்தியாவில் ஜனநாயகம் நிலைக்குமாஞல், அந்தப் பித்துக்கோ இந்தப் பயத்துக்கோ இடமில்லை என்று பொதுப்படையாய்ச் சொல்லலாம்''.

—'மஞ்சரி'
1963 ஆகஸ்ட் இதழ்.

பணியை டால்ஸ்டாய் ஏற்றுக் கொண்டான். பெரும் பொருள் தேவைப்பட்டது, அதற்கு. எனவே டால்ஸ்டாய் 'புத்துயிரை' எழுதினன்.


வெளியீட்டு சரித்திரத்திலேயே அதனை அற்புதம்என்றே சொல்லவேண்டும். மாஸ்கோ இதழில் முதற்பகுதி வெளிவரும் நேரத்தில் அதே கதை லண்டனிலும், பெர்லினிலும், பாரீஸிலும் அந்தந்த மொழி பத்திரிகைகளில்மொழிபெயர்க்கப்பட்டு பிரசுரமாயின. 'புத்துயிர்' நூல் வடிவில் வந்த போது திரும்பத் திரும்ப நாற்பத்தியெட்டு பதிப்புகள் வெளிவந்தன.

'புத்துயிர்' பெருங்கதைக்கு இத்தனை பிரசித்தமான சரித்திர நிகழ்ச்சிகள் பின்னணியாக நின்றன.

கதையின் கரு டால்ஸ்டாயின் உள்ளத்தில் முன்னரே உருப்பெற்றிருந்தது. பல வருடங்களுக்கு முன் டால்ஸ்டாயின் நண்பரான ஒரு வழக்கறிஞர் அவரது கவனத்தைக் கவர்ந்த ஒரு வழக்கு மன்ற நிகழ்ச்சியை டால்ஸ்டாயிடம் சொல்லியிருந்தார். திருட்டுக்குற்றத்திற்காக-கொலைக்கு உடந்தையாக இருந்ததாக தண்டிக்கப் படுகிறாள் ஒரு வேசி. மன்றத்து ஜூரிகளில் ஒருவராக அமர்ந்திருந்த மதிப்புவாய்ந்தபிரமுகர் அவளை அடையாளம் கண்டு கொள்கிறார். முன்னர்அவரால் கெடுக்கப்பட்டு கைவிடப்பட்டஅவள் இறுதியில் அவர் முன்பேநீதிக்காக கொண்டு நிறுத்தப் படுகிறாள்! அவள் வாழ்க்கை சீர்குலைந்து போனதற்கு - தானே பொறுப்பாளி என்பதைஉணர்ந்த அவர் தான் இழைத்த குற்றங்களுக்கு பிராயசித்தமாக அவளையே மணந்துகொள்ள நினைக்கிறார். தினமும் சிறை சென்று அவளுக்கு ஆறுதல் சொல்கிறார். இறுதியில் துன்பியலாகவே அவர்கள் கதை முடிகிறது. அவரது எண்ணங்கள் நிறைவேறுவதற்கு முன்பே அவள் இறந்து விடுகிறாள்!

வழக்கறிஞர் சொல்லிய இந்த சம்பவங்கள் டால்ஸ்டாயின் உள்ளத்தைத்தொட்டன. குறிப்பாக இளமையில் தன் உறவினர் வீட்டிலிருந்த ஒரு இளம் பெண்ணை டால்ஸ்டாய் கெடுத்திருந்தான். கடந்த கால நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றாக அவன் நினைவில் நிழலாடின. இளமையும் உற்சாகமும் நிரம்பிய ஒரு இளம் பிர்புவின்கண்மூடித்தனமான வாழ்க்கையை விவரிக்க டால்ஸ்டாய் எங்குமே தேடியலையத் தேவையில்லாதிருந்தது, அவனது இறந்தகாலமே அதற்கு அற்புதமான எடுத்துக்காட்டாயிருந்தது.

காடுஷா என்ற அழகியும் அவளைச் சுற்றி வலம் வரும் பிரபுக்களும் பிறரும் முக்கிய கதாபாத்திரங்கள்; அவளை முதன் முதலில் களங்கப்படுத்திய நிக்லியுடாவ் சீமானின் ஆடம்பர வாழ்க்கையும், அவ



தேனியில் அறிஞர் அண்ணு அவர்கள் கலைஞருக்கு அளித்த வெள்ளி வீரவாளை இலட்சிய நடிகர் பார்த்து ரசிக்கிறார்.

னது மனமாற்றமும் அதிலிருந்து விளையும் நிகழ்ச்சிகளும் கதைப் பொருள்கள் நிக்லியுடாவின் மன மாற்றம் கதை முழுதும் உயிர் மூச்சாக இழையோடுகிறது.

டால்ஸ்டாய் புதிய நாவல் எழுதப் போவதை அறிந்ததும் பத்திரிகைகள் அவனை மொய்த்தன. கதையின் முதற் பகுதியை எழுதத் துவங்கியதும் 12,000 ரூபிள் தர ஒரு ரஷ்யபத்திரிகை முன் வந்தது, பாரீஸ், லண்டன் நியூயார்க், பெர்லின் போன்ற நகரங்களின் பிரபல பத்திரிகைகளும் இதே தொகையைத்தருவதாக வாக்களித்தன. ஆக, உலகத்தின் பலமொழிகளில் டால்ஸ்டாய் நாவல் ஒரே நேரத்தில் பிரசுரமாகும் பிரமாண்டமான ஏற்பாடு. நடைபெற்றது.

டால்ஸ்டாய் நாவலை எழுதி முடிக்கும்வரை எழுதுவதை பிரதி எடுக்க, பக்கங்களை முறைபடுத்த, பிழைகளைத் திருத்த அவனது பிள்ளைகளும் நண்பர்களும், காரியதரிசிகளும்சேர்ந்த ஒரு பெரும் குழுவே கடுமையாக உழைக்க வேண்டி வந்தது.

'புத்துயிரின்' நாற்பத்தியெட்டுப் பதிப்புகள் உலகெங்கும் பரவின. நன் கொடைகளும் வாழ்ததுக்களும் வந்து குவிந்தன. அதே வருடம் டுகோம் பேர்ஸ் சமுதாயத்தினர் கானடாவிற்கு பயணமானுர்கள். எதற்காக டால்ஸ்டாய் 'புத்துயிரை' எழுதினனே அந்த லட்சியம் அற்புதமாக நிறைவேறிற்று!

வாழ்க்கையில் ஏற்பட்ட ஆருத புண்களை கருணை உள்ளத்தோடு தடவிவிடும் ஒரு மகத்தான மனிதனின் எல்லையற்ற துன்பானுபவங்கள் 'புத்துயிரில் அலையிடுகின்றன என்று பிரபலவிமர்சகன் ஒருவன் குறிப்பிடுகிறான்.

வீணையின் தந்திகளை கைதேர்ந்த கலைஞனின் விரல்கள் தொடும்போது சப்தஜாலங்கள் பிறப்பதுபோல, சிறுசிறுகோடுகளைக் கிழித்து கதாபாத்திரங்களை அற்புதமாகசித்தரிப்பதில் டால்ஸ்டாய் வல்லவன். எழுத்துக்களின் இழைகளை வைத்துக் கொண்டு கலையை அழகோடு பின்னும் பேராற்றலை டால்ஸ்டாய்க்குப் பிறகு ரஷ்ய இலக்கியத்தில் வேறு எவரும்பெற்றதில்லை.

நிக்லியுடாவ் சீமான் வீட்டுப் பிள்ளை; தன் அத்தையின் வீட்டில் வளர்ந்த அழகிய இளம் பெண் காடுஷாவை உணர்ச்சி வசப்பட்டு கெடுத்துவிடுகிறான் ...காலப்போக்கில்அந்த நிகழ்ச்சியை மறந்தும் விடுகிறான்.

பல வருடங்களுக்குப் பிறகு காடுஷா கொலைக்குற்றம் சாட்டப்பெற்றுவழக்குமன்றத்திலே நிற்கிறாள் ஜூரிகளில் ஒருவனுக அமர்ந்திருக்கிறான்நிக்லியுடாவ் சின்னஞ்சிறிதென்று எப்போதோ அவன்விட்டுபோன பாபத்தின் விதை பெரும்விருட்சமாகி வேரூன்றியிருப்பதை வியப்போடு பார்க்கிறான். இளமை மதமதப்பில், வாலிபத்தின் துள்ளலில் அவன் எப்போதோ செய்த தீமை. அவனை பிரமாண்டமாக கவிகிறது.

சிறையில் அவளைச்சந்தித்து, தன் தவறை உணர்வதாயும் அதற்குபிராயசித்தமாக அவளை மணந்து கொள்வதைத் தவிர வாழ்க்கையில் வேறு லட்சியம் இல்லை என்றும் அவன் தியாக உணர்வோடு பேசும்போது, அவள் சிறையிலே மது குடித்து உல்லாசமாக பொழுது போக்க அவனிடம் பணம் கேட்கிறாள்! எல்லோரிடமும் காட்டிப் பழக்கப்பட்டுப்போன புன்சிரிப்பையே அவனிடமும் உதிர்த்து விட்டுப் போகிறாள்!

காடுஷா மற்றகைதிகளோடு தண்டனையைஅனுபவிக்கசைபீரியா புறப்படும்போது நிக்லியுடாவும்அவளோடுசெல்கிறான். தனது பிரபுத் தன்மையை நில புலன்களை, உல்லாச வாழ்வை அனைத்தையும் புறக்கணித்து விட்டு அவளோடு புறப்படுகிறான்.

நிக்லியுடாவின் இத்த மன மாற்றமே கதைக்கு மையமாயிருக்கிறது. மகத்தான அவன் வீழ்ச்சியுற்று அதளபாதாளத்தில் அமிழ்ந்து விடுகிறான். தவறை உணர்ந்த பிறகு அவன் வாழ்வில் நடக்கும் ஒவ்வொரு நிகழ்ச்சியும் மனச்சாட்சியை பக்குவப்படுத்துகிறது. முடிவில்தன் நலவேட்கையை மறந்து தணலில் தங்கமாக நிக்லியுடாவ் ஒளிவிடுகிறான்!

சைபீரியா பயணத்தின் போது காடுஷாவோடு செல்லும் பண்பாடுமிகுந்த அரசியல் கைதிகளின் தொடர்பால் அவளது பழைய குணங்கள் மறைந்து முற்றிலும் புதியவளாகி வருவதையும் அவன் மகிழ்ச்சியோடு கவனிக்கிறான்.

தொல்லைகளும், துயரங்களும் சூழ்ந்தபோதும் அந்தப் பயணம் நிக்லியுடாவிற்கு புனிதமானதாகவே படுகிறது. தன்னுல் வாழ்விழந்தவளை மீண்டும் வாழவைத்து, அவளது புன்சிரிப்பில் தன் பாபங்களை கழுவி விடவே தவியாகத்தவிக்கிறான்

அவளோடு கைதியாக வரும் கெட்டிக்காரனை அரசியல்வாதி ஸைமன்ஸன் இடையே வந்து காடுஷாவை கவர்ந்து விடுகிறான். தனக்காக நிக்லியுடாவ் செய்ய விரும்பும்பெரிய தியாகத்தை அவளால் ஏற்றுக் கொள்ளமுடியவில்லை. தீர்மானமாகவே தனது எண்ணத்தை அவனிடம் சொல்லி விடுகிறாள்.

இதற்கிடையே காடுஷாவின் விடுதலைக்காக நிக்லியுடாவ் செய்த பெருமுயற்சியும் பயனளிக்கிறது. கைதியாக வாழப் போகும் ஸைமன்ஸனேடு செல்லவே காடுஷா விரும்புகிறாள்.

எல்லாவற்றையும் இழந்துவிட்ட நிக்லியுடாவ் தன்னந்தனியாக தன் இருப்பிடம் செல்கிறான். அவன் மனம் அமைதியின்றி அலைகிறது. மாத்யூ சுவிசேஷத்தை எடுத்துப் படிக்கிறான். மலைப்பிரசங்கத்தின் ஒவ்வொரு வரியும் அவனுக்குப் புதுப்புதுஅர்த்தங்களை உணர்த்துகின்றன.

"அன்று இரவு அவன்புதிய வாழ்க்கை உதயமாயிற்று. வாழ்க்கையில் புதிய நிலை ஏற்பட்டது என்பதால்ல அன்று இரவுக்குப் பின் அவன் செய்த ஒவ்வொரு செயலுக்கும் முற்றிலும் வேருன புதிய, பொருள் தொனிப்பதாகவே பட்டது.

அவனுடைய வாழ்வின் புதிய கட்டம் எப்படி முடியுமோ? அதைக் காலம்தான் சொல்ல வேண்டும்."

இந்தக் கடைசி வரிகளோடு டால்ஸ்டாய்'புத்துயிரை'முடித்திருக்கிறான்.

ஒருமுறை டால்ஸ்டாயின் எழுத்தாற்றலைஎண்ணிஎண்ணி பூரித்து போனடாஸ்டோவஸ்கி அவனை'தெய்வத்தச்சன்'என்று புகழ்ந்தான். அந்த தெய்வத் தச்சன்அலட்சியமாக செதுக்கியிருக்கும் அற்புதமான கலைச் சிற்பமாகவே 'புத்துயிர்' காட்சியளிக்கிறது.

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

விட்டாலோ வடக்கே இருப்பவனுக்கு பதில்சொல்லணும். நடவடிக்கை எடுத்தாலோ மக்களிடம் கெட்ட பெயர் எடுத்துக் கொள்வதோடு மட்டுமின்றி வரும் தேர்தலின் போதும் மக்களின் கோபத்திற்கு ஆளாக வேண்டும். 1962-ல் ஜெயித்த லட்சணம்தான் நாடே தெரிந்த ரகசியமாகிவிட்டது.

காமராசர்: தேர்தலைப்பற்றி நீர் ஏன் கவலைப்படுகிறீர். அதற்காகத்தான் நான் பதவியை விட்டு கட்சி வேலையில் ஈடுபட்டிருக்கேன்.

பக்தவத்சலம்: கிழித்தீர்கள் போம்! பதவியில் இருக்கும்போது திருச்செங்கோடும், திருவண்ணமலையும் உம் நெற்றியில் நாமத்தைப் போட்டு வேடிக்கை பார்த்தது. இனிமேல்தான் நீர் காரியத்தை சாதித்துவிடப் போகிறீராக்கும். இனி உம்மிரட்டலும், உருட்டலும் விலை போகாது.

காமராசர்: என்னய்யா இப்படி பேசுகிறீர்? தப்பு என்னுடையதுதான். புத்தி இப்பொழுதுதான் வருகிறது. மூத்த மந்திரிகள் பதவியை விட்டு விலகணும் என்ற திட்டத்தின்கீழ் உம்மையும் வெளியில் அனுப்பியிருக்க வேண்டும். அதுதான் கெட்டது உம்மைப்போய் முதலமைச்சராக்கினேனே அதுதான் என்னுடைய முட்டாள்தனம். உமது இடத்தில் கக்கனை அமர்த்தியிருந்தால் நான் சொல்லுகிறபடியெல்லாம் ஆடிடுவார்.

பக்தவத்சலம்: நீர் நினைக்கிறபடி இனி எதுவும் நடக்காது. இப்பொழுது நடந்த முதலமைச்சர் பதவி தேர்வின்போதும், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் தேர்தல் போதும் ஏற்பட்ட போட்டியைக் கண்ட பிறகுமா இனியும் உமக்கு செல்வாக்கு இருப்பதாக நினைக்கிறீர்?

காமராசர்: ஜனநாயகத்தில் போட்டி தவிர்க்க முடியாத ஒன்று.

பக்தவத்சலம்: ஜனநாயகத்தைப்பற்றி நீங்களா பேசுகிறீர்? உங்கள் ஆட்சிகாலத்தில்தான் குறிப்பாகத் தேர்தல் சமயத்தில் உமது ஜனநாயகத்தைப்பற்றி நாடே சிரிப்பாய் சிரித்ததே.

காமராசர்: இருக்க இருக்க பேச்சில் சூடு அதிகமாக இருக்கிறதே! நாட்டில் உள்ள வதந்தி சரிதான் போலிருக்கிறது.

பக்தவத்சலம்: என்னைப்பற்றியா?

காமராசர்: ஆமாம்......ஆமாம். உம்மைப்பற்றித்தான்.

பக்தவத்சலம்: அப்படி என்ன வதந்தி இருக்கிறது?

காமராசர்: இனி உமது ஆட்சிகாலத்தில் தி. மு. க.வை மேலும் செல்வாக்குடனும், எதிர்க்கட்சி என்ற தகுதியுடனும் நடத்துவீர்கள் என்று கூறப்படுகிறதே!

பக்தவத்சலம்: ஜனநாயகத்தைப்பற்றிக் கூறினீரே இவ்வளவு நேரம்! ஆளும் கட்சி என்று ஒன்று இருந்தால் எதிர்க்கட்சி என்று ஒன்று இருந்துதான் தீரும். அதுதான் ஜனநாயகம் தழைக்கவும் வழியாகும். உம்மைப்போல் எதிர்க்கட்சியை எதிரிக் கட்சியாக என்னையுமா நினைக்கச் சொல்கிறீர்!

காமராசர்: சரிதான்......சரிதான்! உம்க்கு ஜாதிவெறி!

பக்தவத்சலம்: சாதியைப்பற்றி பேசாதீர். நீர் மட்டும் என்னவாம். நம்நாட்டில் உள்ள எதிர்கட்சிகளில் நாம் தமிழர் கட்சி என்று ஒன்று இருக்கிறது தெரியுமா? அதுவும்தான் தி. மு. க.வைப்போல் பிரிவினையைப் பேசுற கட்சி. அப்படியிருக்க தி. மு. க. வைத் திட்டித் திரியும் நீர் நாம் தமிழர் கட்சியை ஏன் மருந்துக்குக்கூட தொட்டுப் பேசவில்லை?

காமராசர்: நாமாக ஏன் அதற்கு மதிப்புக் கொடுத்துப் பேசவேண்டும் என்றுதான்!

பக்தவத்சலம்: அதுதான் கிடையாது! நீரும் நாடார்! ஆதித்தனும் நாடார்! அதனால்தான் நீர் அந்தக் கட்சியைப் பற்றியே பேசுவது கிடையாது வெட்கம்! வெட்கம்!

காமராசர்: நீர் பேசுவதைப் பார்த்தால் தி. மு. க.வை மறைமுகமாக வளரவிடுவீர் போலிருக்கிறதே?

பக்தவத்சலம்: அது உமது குணம்! தமிழ்நாட்டில் உங்களுக்குச் செல்வாக்கு ஏற்படவேண்டும் என்பதற்காக வேண்டியும், தி. மு. க-வை அழித்துவிடவேண்டும் என்பதற்காகவும் தி. க.வை மறைமுகமாக ஆதரித்து வளர்க்கவில்லையா? காங்கிரஸ்காரர்களைக் கொண்டு மேடை அமைத்துக் கொடுத்து தி. க. வினரைப் பேசவைக்க வில்லையா? தேர்தல் சமயங்களில் காளைமாட்டுக் கொம்புகளில் காங்கிரஸ் கொடியும், தி. க. கொடியும் ஒன்ருகக் கட்டிப் பறக்கவிடவில்லையா? இவையெல்லாம் கண்கூடாகத் தெரிந்தும் கண்டிக்காமல் நீர் இருக்கவில்லையா?

காமராசர்: சரி...சரி...அதிகம் பேசுவானேன். டில்லிக்குப் போகும்போது உம்மைப்பற்றி நேருவிடம் கொஞ்சம் சொல்லிவைக்க வேண்டியதுதான்.

பக்தவத்சலம்: சொல்லும்! சொல்லும்! நீர் யாரிடம் என்னைப்பற்றி எதைச் சொன்னலும் என்னை ஒன்றும் செய்துவிட முடியாது.

காமராசர்: அக்ரமம்...அக்ரமம்... நான் வருகிறேன்.

(திரு. காமராசர் தன் பரிதாப நிலையை எண்ணி வருந்தி எழுந்து போகிருர்.)

—கடலூர், இராமையன்.

---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

காஞ்சிபுரத்திற்குச் சென்று கல்யாண நிகழ்ச்சியைக் கண்ணுரைப் பார்த்துவிட்டு வந்து-'குமுதம்' தன் சொந்தப் பொறுப்பிலே இதுபோன்ற செய்தியை வெளியிட்டிருக்குமானல், நாம் அதைப் பார்க்கிற பார்வையே-பதில் சொல்லுகிற பாணியே வேருக அமைந்திருக்கும்.

துணைக் கண்டத்திலுள்ள மரியாதைக்குரிய பத்திரிகைகளில் ஏதாகிலும் ஒன்றில் இப்படிப்பட்ட செய்தி வெளியாகியிருக்குமானல் அதைப் பிரச்சினைக்குரிய விஷயமாக எடுத்துப் பிரசுரித்துக் காட்டுவதில் தவறில்லை.

ஆனல், எவனே ஒரு குடிகாரன் வாந்தி எடுத்ததையெல்லாம் குமுதத்திலே பந்தி வைப்பதென்ருல் இது என்ன பத்திரிகா தர்மம்?

விலைமகள் தோள்மீது குலமகள்-குமுதமகள்கைபோட்டுக் குலாவலாமா?

தரமுள்ள பத்திரிகை குமுதம் என்று வர்ணிக்கப் பட்டதே அது தவரு?

பொறுப்புள்ள பத்திரிகை குமுதம் என்று பேசப்பட்டதே அது பொய்யா?

கந்தல் பத்திரிகையிலே வெளியான இல்லாத செய்திக்கு இடம் கொடுத்தாகி விட்டது. இனி மஞ்சள் பத்திரிகையில் வெளியாகும் செய்திகளையெல்லாம் குமுதத்தில் எதிர்ப் பார்க்கலாமா?

விவஸ்தை கெட்ட செய்திகளை வெட்டி ஒட்டுவது'குமுதம்' கையாண்டுவரும் புதுமுறைகளில் ஒன்ருக இருக்குமோ?

தென்னகத்தின் இலட்சக் கணக்கான மக்களின் பேரன்பிற்கும்-மரியாதைக்கும் உரிய ஒரு பெருந்தலைவர் வீட்டுத்திருமண நிகழ்ச்சியைப்பற்றி, கீழ்த் தரமான பத்திரிகையில் வெளியான செய்தியை, வெட்டி எடுத்துப் பிரசுரிக்கிருேமே இது எந்த அளவு உண்மையாக இருக்கும் என்று ஆராய்ந்து பார்க்கின்ற சக்தி கூட, பொறுப்பு கூட குமுதத்தின் ஆசிரியருக்கோ - அதன் குழுவிற்கோ இல்லாமற் போய் விட்டதா?

அண்ண வீட்டுத் திருமணம் சாஸ்திர முறைப்படியோ பஞ்சாங்க முறைப்படியோ நடைபெறவில்லை என்பது நாடறிந்த உண்மை.

மணமக்கள் ஒன்றரை மணி வரையிலும் மணப்பந்தலில் இருந்தார்கள். வாழ்த்துக்களை அகம் மலர, முகம் மலர, செவி குளிரக் கேட்டார்கள். இது திருமண நிகழ்ச்சியில் கலந்து கொண்டோர் கண்ட உண்மை!

"அண்ணதுரை எமகண்டத்திற்குபயந்து 12 மணிக்கு முன்பாகவே மணமக்களை 'பாக்' செய்து அனுப்பி விட்டார்"- என்று ஏதோ வீதியிலே சுத்துகிற விலங்கு, பாதி மயக்கத்திலே பத்திரிகைச் செய்தியாக்கிக் காட்டியதை எடுத்து-குடும்பப் பத்திரிகை என்று கூசாமல் பவனி வரும் குமுதத்தில் வெளியிட்டிருப்பது - நெறிகெட்ட செயல்! முறைகெட்ட வேலை! தரங்கெட்ட வியாபாரம்!

எதற்கும் ஒரு இலக்கணம் வகுத்துக் கொண்டு-ஒரு கோடு போட்டுக்கொண்டு 'இப்படித் தான்' பொருளும்-புகழும் சம்பாதிக்க வேண்டும் என்பது தமிழ் நாட்டுப் பண்பு! ஏன்-செட்டி நாட்டுப் பண்பும்கூட!

இந்த தர்மம் தரமான பத்திரிகைகளுக்கும் உண்டு!

போலி ஏடுகளில் வரும் பொறுப்பற்ற செய்திகள் 'குமுத'த்தில் இடம் பெருமல்-அசல் தமிழர் நடத்தும் கிழமை இதழ் இனியாகிலும் அசல் செய்திகளோடு வெளிவரும் என்று நம்புகிருேம்.

# ?...பதில்!

கே: முரட்டுப் பிடிவாதத்துடன் மொரார்ஜி நிறைவேற்றிக்கொண்டிருந்த தங்கக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை டி. டி. கே. தைரியமாக மாற்றியமைத்து விட்டாரே இதுபற்றித் தங்கள் கருத்தென்ன?

—இராமதாஸ்
ஜெயங்கொண்டம்.

ப: மொரார்ஜி-தன் முரட்டுப் பிடிவாதத்தால் நூறு பொற்கொல்லர்களின் உயிரை பலிகொண்டுவிட்டார். நூறு தாலிக் கயிறு அறுந்து தரையிலே விழுந்துவிட்டது. அந்த நூறு குடும்பங்களிலும் உள்ள மனைவி மக்கள் இன்று தவியாய்த் தவிக்கின்றனர். திட்டத்திற்குப் பலியான நூறு உயிர்களை இந்த அரசினரால் திருப்பித்தர இயலுமா? தாலியிழந்து நிற்கும் தாய்மார்களுக்கு இவர்களால் வாழ்வு தர முடியுமா? டி. டி. கே. வந்தவுடன் மொரார்ஜியின் திட்டத்தை மாற்றித் தொலைத்திருக்கிறார் என்றால் அது ஓட்டை உடைசல் நிறைந்த திட்டம் என்றுதானே பொருள்? அதை முதலிலேயே மாற்றியமைக்க-இந்த அரசு பிடிவாதம் செய்வானேன்? ஒரு சாதாரணத் திட்டத்தை மக்கள் விருப்பப்படி திருத்திக்கொள்ள நூற்றுக்கணக்கான உயிர்களைப் பலி கொடுத்தால்தான் முடியுமா? இதுதான் நேரு சர்க்காரின் ஜனநாயகமா? மொரார்ஜி போன்றோரின் கொலை பாதகச் செயல் ஒழிக! ஒழிக!

கே: இலங்கையில் வாழும் தமிழர்கள் சிரிமாவோ அரசினரால் தொல்லைக்கு ஆளாக்கப்படுகிறார்களே-அதற்குமுடிவே கிடையாதா? அவர்கள் எதிர்காலம் என்ன?

—தியாகராசன்
ஆற்காடு.

ப: சிரிமாவோ அரசின் அக்ரமச் செயல்களை எதிர்த்து இலங்கைத் தமிழர்கள் நடத்தும் போராட்டத்தில் அவர்கள் வெற்றிபெறுவார்கள் என்றே நம்புகிறோம். இந்தியத் துணைக்கண்ட அரசினரின் ஆதரவு அவர்களுக்குக் கிடைக்குமானால் அவர்கள் இரத்தம் சிந்தாமலே வெற்றிபெற முடியும்.

கே: "சினிமாவுக்குப் பாட்டெழுதுவதுபோல் நாட்டை ஆட்சி செய்வது என்று எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். அது தி. மு. க. வினரால் ஒருபோதும் நடைபெற முடியாத காரியம்" என்று காமராஜர் பேசியிருக்கிறாரே தங்கள் கருத்தென்ன?

—அன்புரோஸ்
தாம்பரம்.

ப: சினிமாவிற்குப் பாட்டெழுதுவதை காமராஜர் சுலபமாக எண்ணிக்கொண்டிருக்கிறார். கலைஞர் கருணாநிதி அவர்களுக்குப் பாட்டெழுதத் தெரியும்-அவரை ஆட்சி பீடத்திலே அமரவைத்தால் காமராஜரைவிடத் திறமையாக ஆட்சி நடத்தவும் தெரியும். ஆனால் காமராஜரைக் கூப்பிட்டு சினிமாவிற்கு பாட்டெழுதச் சொன்னால்-ஐயகோ! அந்தக் கண்றாவி எழவை யாரால் சகித்துக்கொள்ள முடியும். தி. மு. கழகத்தினர்க்குப் பாட்டெழுதவும் தெரியும்-பாராளும் திறமையும் உண்டு! காமராஜருக்குக் குறுக்குவழி அரசியலைத் தவிர வேறென்ன தெரியும்? அவர் அரசியல் அஸ்தமனமாகும் காலம் நெருங்கிக்கொண்டிருக்கிறது! அதனால்தான் நிதானம் தவறிப் பேசுகிறார்.

சயத்தை டெல்லிஅரசு செய்திப் படமாக எடுத்தது. துரோகிகள் என்று துரத்தியடிக்கப் படவேண்டிய கம்யூனிஸ்டுகள் நேரு சர்க்காராலேயே மேளதாளத்தோடு வரவேற்கப்பட்டார்கள். இந்த நிகழ்ச்சியெல்லாம் சந்துமுனைதோறும் அவர்கள் சத்தம் போட்டதற்குக் கிடைத்த வெற்றிதானே!

கே: பாண்டிச்சேரியில் நடந்து முடிந்த தேர்தலில் கம்யூனிஸ்டுகளும் - கம்யூனிஸ்டுகள் ஆதரித்த சரஸ்வதி சுப்பையாவும் படுதோல்வியடைந்தது எதைக் காட்டுகிறது!

—கே. கே. சுந்தரம்
காவேரிப்பாக்கம்.

## வணங்காமுடி பதில் தருகிறார்

கே: எல்லா மாநிலங்களிலிருந்தும் கம்யூனிஸ்டுகள் 'மகாவிண்ணப்ப' ஆர்ப்பாட்டம் நடத்த டெல்லிக்குச் சென்றார்களே அதற்கான செலவு தொகையை யார் கொடுத்தார்கள்? ஆர்ப்பாட்டத்தின் மூலம் மக்களுக்குக் கிடைத்த நன்மை என்ன?

—என். இராசு
திருவாரூர்.

ப: ரயில் செலவுக்கான தொகையை கம்யூனிஸ்ட் கட்சி கொடுத்தது. அந்த ஆர்ப்பாட்டத்தின் மூலம் மக்களுக்கு எந்தவித நன்மையும் இல்லை! மாற்றமும் இல்லை. ஆனால் அவர்களுக்கு நல்ல விளம்பரம் கிடைத்தது. கட்சிச் செலவில் சில கம்யூனிஸ்டுகள் டெல்லி நகரைக் கண்டு களித்தார்கள். அவர்கள் ஆர்ப்பாட்ட அதி

ப: பாண்டிச்சேரியை தங்கள் கோட்டை என்று கூறி வந்தார்கள் கம்யூனிஸ்டுகள். அது வெறும் கூச்சல் என்று தெரிகிறது. கம்யூனிஸ்டுகளின் தேசபக்தி நாடகம் அங்கு எடுபடவில்லை. துரோகிகளுக்குச் சரியான பாடத்தை-உரிய நேரத்தில் வழங்கியிருக்கிறார்கள் பாண்டிச்சேரி மக்கள்.

கே: தமிழ்நாட்டில் இளைஞர்களின் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட அரசியல் தலைவர் யார்?

—எம். சோரப்பன்
பகத்தூர்.

ப: பதில் சொல்வதற்கு சிரமம் இல்லாதகேள்வி! உணர்ச்சியூட்டும் பேச்சால், எழுத்தால், கொள்கையால், செயலால், வலிமைகொண்ட இயக்கத்தின் பேராற்றலால் இந்த நாட்டு இளைஞர்களின் உள்ளத்தைக் கொள்ளை கொண்டிருக்கும் ஒரே ஒரு தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள்தான்.

கே: சில பத்திரிகைகள் தி. மு. கழகத்தைத் தாக்கி எழுதி வருகின்றனவே இதைப் பற்றி தங்கள் கருத்து என்ன?

—எம். தவக்கல்பாஷா
கரம்பக்குடி.

ப: காய்த்த மரத்தில் கல்லெறிவது சில தெருச் சுற்றிகளின் வேலை. உதிரும் சில கனிகளுக்கு நாக்கைத் தொங்கப் போட்டுக் கொண்டு நிற்பர். இதைப் போலவே-கதர் வேட்டிகளிடம் 'சபாஷ்' பெறவும், காமராசரின் கடாக்ஷம் பெற்றுத் தொப்பையை நிரப்பிக் கொள்ளவுமே சில பத்திரிகைகள் கழகத்தை நோக்கி ஊளையிட்டு உயிர் வாழுகின்றன.

கே: திருப்பதி வெங்கடாஜலபதியைத் தரிசனம் செய்வதால் வாழ்க்கையில் எல்லாவிதப் பாக்கியமும் கிடைக்கிறது என்று சொல்லுகிறார்களே அதில் உங்களுக்கு நம்பிக்கை இருக்கிறதா?

மாணிக்கவாசகன்
திருத்துறைப்பூண்டி.

ப: சமீபத்தில் சென்னையிலிருந்து புறப்பட்ட விமானம் ஒன்று வடக்கே ஓர் கிராமத்திலுள்ள சோளக்காட்டில் விழுந்து நொறுங்கி அதில் பிரயாணம் செய்த அத்தனை பேரும் உருத்தெரியாமல் அழிந்து போனார்களே, அவர்களில் சிலர் புறப்படுமுன் திருப்பதித் தேவனை வணங்கிவிட்டு ஏறியவர்கள்தானும். இவர்களுக்கு அவன் அளித்த கதியைப் பார்த்தீர்களா? கடவுள் வணக்கத்தின் மூலம்-கஷ்டம் தீரும் என்பதோ, பதவி நிலைபெறும், பாக்யம் கிட்டும் என்ற கருத்தோ-கோழைத் தனமானது மட்டுமல்ல-முட்டாள் தனமானதுங்கூட.

கே: கட்சியின் கொள்கைகளுக்கு மாறுபட்டு நடப்பவனைப் பற்றி நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?

—இளையபெருமாள்
அறந்தாங்கி.

ப: துரோகி என்று துணிந்து கூறுவேன்.

கே: நாங்கள் ஒரு டைரி தயார் செய்து கொண்டிருக்கிறோம். அதற்கு நமது மேயர் குசேலரின் வாழ்க்கை வரலாறு சுருக்கமாகத் தேவைப் படுகிறது. உங்களால் தர முடியுமா?

எல். சீனிவாசன்,
கொழும்பு.

ப: முடியாதையா! அவரைப் பற்றி எனக்குத் தெரியாதையா!


திராவிட விடுதலை மறவர்களுக்குக் கவசமாய்...
கெட்ட வீணர் கும்பலுக்கோர் பேரிடியாய்...

**அக்டோபர் 11ல்! வெளி வருகிறது !!**

அரசியல் முற்போக்கு வார ஏடு

"பிறப்புரிமை"

ஆசிரியர்: கோமகன் (R. ஜார்ஜ்)

எல்லா ஊர்களுக்கும் முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் தேவை.

விவரங்களுக்கு: நிர்வாகி, "பிறப்புரிமை"—
151, இராமகிருஷ்ண மடம் ரோடு, சென்னை-4.

Regd No: M 7640

விலை 10 காசு

# வெண்பாப் போட்டி

## அண்ணு வழியே வழி.

எண்ணிலா விண்மீன் இலகிடினும் வானமதில்
வெண்ணிலா ஒன்றன் ஒளியாமோ?—மண்ணுலகில்
பண்ணார் மொழிபேசும் பாரோரில் மேம்பட்ட
அண்ணு வழியே வழி.

—ஆ. இராசமாணிக்கம், சென்னை-21.

⁂ ⁂ ⁂

பித்தம் தணியாத எத்தர்தம் செய்கைதனை
முத்தமிழால் மூச்சடங்கச் செய்வோம்—நித்தியமாய்
கண்ணியம் காத்து கடமைக்கே வாழ்கின்ற
அண்ணு வழியே வழி.

—வெங்கட்டராமன் சென்னை-21.

⁂ ⁂ ⁂

கன்னல் மொழியாகும் கன்னித் தமிழ்காக்க
எண்ணும் செயலில் இறங்கிடுவார்—பெண்ணழகே!
கண்ணும் உயிர்கருதார் காலமெலாம்
அண்ணு வழியே வழி.

—கோமகன், சென்னை-28,

⁂ ⁂ ⁂

வள்ளுவர்வாக் கொத்தவழி வாய்மையது சொல்லுவழி
வெள்ளையுளம் போற்றுவழி வீரவழி—துள்ளுவழி
வண்ணமலர் சூடுவழி, வாஞ்சையெலாம் கொஞ்சுவழி
அண்ணு வழியே வழி.

—பிரியேபிர்ட், கோவை-4.

⁂ ⁂ ⁂

கன்னித் தமிழ்நாட்டுக் காவலரை; கற்ரோர்சொல்
நண்ணித் துயர்களையும் நாவலரை நுண்ணினயாய்
கண்ணுகப் போற்றிவரும் காஞ்சிப் பதித்தலைவர்
அண்ணு வழியே வழி.

—அ. கண்ணன், போளூர்.

⁂ ⁂ ⁂

செந்தமிழை நாளும் சிதைக்கவரும் இந்தியினை
வந்தவழி ஓட்டி வலிமையுடன்—நந்தமிழை
கண்ணுகக் காக்க, கருத்துள்ள நந்தலைவர்
அண்ணு வழியே வழி.

—குறள்தாசன், மெதூர்.

⁂ ⁂ ⁂

இந்தி மொழியதனை இங்கிருந் தோட்டுதற்கும்
நந்தமிழின் நற்புகழை நாட்டுதற்கும்—செந்தமிழா!
கண்ணன்னர் போற்றும் கருத்துமிகு பேரறிஞர்
அண்ணு வழியே வழி!!

—இரெ. மதிமாறன், தெற்குப் பொய்கைநல்லூர்.

⁂ ⁂ ⁂

கண்ணி லிமையாய்க் காத்திடுவீர் நற்றமிழை
மண்ணி லதனின் பிறவுளவோ-ஒண்டடியே
எண்ணில் மனிதர் இதயந் திறந்துவரும்,
அண்ணு வழியே வழி!

—வெற்றித்திருமகள் மணி, சைதாப்பேட்டை.

⁂ ⁂ ⁂

தென்னுட்டின் சீர் உயர தென்னவரின் மாண்புயரப்
பொன்னுட்டில் தோன்றிய நற் பேரறிவாம்!-நன்னுட்
[டின்
கண்ணுன கன்னித் தமிழ்காக்கப் போராடும்
அண்ணு வழியே வழி.

—செ. நாராயணன், மேலமையூர்.

⁂ ⁂ ⁂

கடமையுடன் கண்ணியமும் கட்டுப்பா(டு) ஒன்றி
உடமையினை உள்ளாத உள்ளம்—அடைந்திடத்
தன்னர் தமிழ்நாட்டின் தம்பிகட்குக் கண்ணுனைம்
அண்ணு வழியே வழி.

—சின்னத்தம்பி, கரட்டுப்பட்டி.

கோடிப்பொய் கையெழுத்துக் கொண்டாலும் புத்தர்
[போல்
ஓடி அமைச்சவையை விட்டாலும்—கூடாது
உண்மைநெறி யோடு உலகாள எண்ணுவோர்க்கு
அண்ணு வழியே வழி.

—மு. வரதராசன், துறையூர்.

⁂ ⁂ ⁂

கொஞ்சிக் குலவும் குளிர்தமிழை வஞ்சித்து
நெஞ்சில் விடம்சேர்ப்பர் நீசர்-அஞ்சுகமே
அன்னவர்செய் தீமை அகற்றிடவே வேண்டுமெனில்
அண்ணு வழியே வழி!

—சி. முருகேசன், மதுரை.

⁂ ⁂ ⁂

செந்தமிழ்க்கு வந்ததுவே வெம்பகை எந்தமிழீர்!
நந்தமிழைக் காப்போம் நலமுறவே-சந்ததமும்
எண்ணத்தில் நின்ருெளிரும் இன்தமிழைப் பேணுதற்கு
அண்ணு வழியே வழி.

—சி. கலியபெருமாள், கோவில்பட்டி.

⁂ ⁂ ⁂

ஆண்ட தமிழினத்தின் ஆட்சியது மீண்டுவர
மாண்ட பெருமையெலாம் மாட்சியுற-யாண்டுமதாம்
எண்ணரிய நன்மையுடன் இந்நாட்டில் வாழ்ந்துவர
அண்ணு வழியே வழி.

—சோதி, கண்ணம்மா, சென்னை-31.

⁂ ⁂ ⁂

சோறுதின்போர் சோம்பேறி என்ருர் வடவர்
வீறுகொண்டே இந்தியும் கொள் என்ருர்-மாறுமா
எண்ணம் வடவர்க்கு? தென்னவனே! வந்திடுவாய்
அண்ணு வழியே வழி.

—ச. இராசகோபால், ஆறுமுகநேரி.

⁂ ⁂ ⁂

சங்கம் துவக்கி மொழிவளர்த்தான் தென்னுட்டில்
தங்கம் அனைய தமிழ்வேந்தன்—எங்கெங்கும்
தன்னுலே ஓங்கித் தளிர்போல் வளர் அறிஞர்
அண்ணு வழியே வழி.

—எம். ஆர். டாஸ், வாவிபாளையம்.

⁂ ⁂ ⁂

"சிங்கத் திராவிடரே! செங்குருதி கொட்டிடுவோம்;
தங்கத் திருவிடத்தை மீட்டிடுவோம்!—மங்காத
வண்டமிழைக் காத்திடுவோம் வந்திடுவீர்" என்றழைக்
[கும்
அண்ணு வழியே வழி!

—எஸ். மாறன், உசிலை.

⁂ ⁂ ⁂

அறிவுநிறை புத்தபிரான், அன்பு நிறை ஏசு,
திருவுடைய நாயகமாம் சான்ருேர்-பொறுமையுடன்
மண்ணகத்தே சொன்னவற்றைத் தன்னகத்தே
[கொண்டிலங்கும்
அண்ணு வழியே வழி

—பு. கலா, கிருட்டினகிரி.

⁂ ⁂ ⁂

வெல்லும் துணிவுடனே வந்தாலும் இந்திமொழி
வெல்லத் தமிழை விழுங்கிடுமோ-மெல்லியலீர்!
இந்நாள் அதையொழித்து ஏற்றம் மிகப் பெறவே
அண்ணு வழியே வழி.

—மொழிவாணன், மதுரை.

## வெண்பாப் போட்டி

ஈற்றடி: 2

**வாழ்நாள் இனி வேண்டாம் வா!**

நேரிசை வெண்பாவாக எழுதி அனுப்புக

ஆசிரியர் வெளியிடுபவர்: ஜி. தினகரன், 31, பார்த்தசாரதிபேட்டைத் தெரு, சென்னை-6.
அச்சிடுபவர்: எஸ். சொக்கலிங்கம், பாரதம் பிரஸ், 14, உஸ்மான் ரோடு, சென்னை-17,